# கிராமிய சேவைத் திட்டம்

**ஆழியார் அறிவுத்திருக்கோயில்**
**பொள்ளாச்சி மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை**
**கஞ்சம்பட்டி கிராமம்**




## (WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

| | |
|---|---|
| ☞ நோயற்ற வாழ்வு | ☞ குடும்ப அமைதி |
| ☞ கல்வியில் மேன்மை | ☞ கர்மயோக வாழ்க்கைநெறி |
| ☞ சுற்றுப்புற சுகாதாரம் | ☞ மனிதநேயம் |
| ☞ முதியோரைப் பாதுகாத்தல் | ☞ மதநல்லிணக்கம் |
| ☞ மகளிர் மேம்பாடு | ☞ சமுதாய விழிப்புணர்வு |

**தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்**

# ஆழியார் அறிவுத்திருக்கோயில்
# பொள்ளாச்சி மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# கஞ்சம்பட்டி கிராமம்

## Contents


1. செயல்பாட்டு அறிக்கை....3

2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்....4

3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்....4

4. கஞ்சம்பட்டி கிராமத்தின் தொடக்கவிழா....5

5. மருத்துவ முகாம்....7

6. மனநல ஆலோசனை முகாம்....7

7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் - மரக்கன்று வழங்குதல்....7

8. மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி....8

10. அனுபவ உரை....9

11. எதிர்காலத் திட்டங்கள்:....15

12. வாழ்த்து:....15

## 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information | | |
|---|---|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | ***கஞ்சம்பட்டி*** | | |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | **25-04-2024** | | |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | **27-09-2024** | | |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | **5 *மாதங்கள்*** | | |
| 5. | மண்டலம் | **கோவை** | | |
| 6. | அறக்கட்டளை | **பொள்ளாச்சி** | | |
| 7. | நிதி உதவி வழங்கியவர் | ***ஆழியார் அறிவுத்திருக்கோயில்*** | | |
| 8. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | ***ஆண்:268*** | ***பெண்:700*** | ***மொ:968*** |
| 9. | ***கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள்*** | ***ஆண்:93*** | ***பெண்:678*** | ***மொ:771*** |
| 10. | ***காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை*** | ***ஆண்:83*** | ***பெண்:639*** | ***மொ:722*** |
| 11. | ***தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை*** | ***ஆண்:83*** | ***பெண்:637*** | ***மொ:720*** |
| 12. | ***முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்*** | ***ஆண்:54*** | ***பெண்:142*** | ***மொ:196*** |
| 13. | ***இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்*** | ***ஆண்:54*** | ***பெண்:142*** | ***மொ:196*** |
| 14. | ***மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்*** | ***ஆண்:50*** | ***பெண்:123*** | ***மொ:173*** |
| 15. | ***பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள்*** | ***ஆண்:23*** | ***பெண்:30*** | ***மொ:53*** |
| 16. | ***ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள்*** | ***ஆண்:0*** | ***பெண்:02*** | ***மொ:02*** |
| 17. | உடற்பயிற்சி பயின்றவர்கள் ***(Students below 14)*** | ***ஆண்:67*** | ***பெண்:56*** | ***மொ:123*** |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் **பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.**மயிலானந்தன்** அவர்களால் **328-**வது கிராமமாக **கஞ்சம்பட்டி** கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் **25.04.2024-**ஆம் தேதியிலிருந்து **27.09.2024-**ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. கஞ்சம்பட்டி கிராமத்தின் தொடக்கவிழா

***ஆழியார் அறிவுத்திருக்கோயில்*** *நிதி உதவியுடன்* ***கோவை மண்டலம்****,* ***பொள்ளாச்சி*** *மனவளக்கலை மன்ற அறக்கட்டளை சார்பாக* ***25.04.2024*** *-ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,* ***பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM. மயிலானந்தன்*** *அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும்* ***கஞ்சம்பட்டி*** *கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.*













**உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி**














## 5. மருத்துவ முகாம்

***25.07.2024*** *அன்று கஞ்சம்பட்டி கிராமத்தில் Lions Club மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் ஆண்கள்-42, பெண்கள்-90, மொத்தம்* ***132*** *அன்பர்கள் கலந்துகொண்டனர்.*







## 6. மனநல ஆலோசனை முகாம்

*25.08.2024 அன்று* ***Dr.Ramesh*** *அவர்களால் கஞ்சம்பட்டி கிராமத்தில்* **மன நல ஆலோசனை முகாம்** *நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் மொத்தம் 207 பேர் கலந்துகொண்டனர்.*







## 7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் - மரக்கன்று வழங்குதல்

*19.05.2024 கஞ்சம்பட்டி கிராமத்தில் கிராம மக்களுக்கு 150 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.*



## 8. மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி

**25.04.2024** அன்று அ/நி.M.சின்னசாமி, நிர்வாக அறங்காவலர், உலக சமுதாய சேவா சங்கம் அவர்களால் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி துவக்கவங்கப்பட்டது. இலவச தையல் பயிற்சி மூலமாக 30 கிராமப் பெண்கள் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர் .










## 9. சர்வதேச யோகா தினம் & பிரம்மஞானம் பயிற்சி

21.06.2024 அன்று கஞ்சம்பட்டி கிராமத்தில் சர்வதேச யோகாதினம் நடத்தப்பட்டது. இதில் கிராம மக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டனர். மேலும் பிரம்மஞான வகுப்பில் 42 கிராம ஆனபர்கள் கலந்து கொண்டனர்.






## 10.அனுபவ உரை

## Result Inference

| S.No. | Inference |
|---|---|
| 1 | 99% of the Women participants are satisfied with their tailoring skills developed. |
| 2 | Around 98% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 3 | 97% of the participants are able to moralize their desire to be contented |
| 4 | 94% of the participants are able to eradicate worries and maintain a healthy life |
| 5 | 93% of the participants are satisfied with their children education and attitude |
| 6 | Around 87 % of the participants are out of the depression compared to before joining the program |
| 7 | Around 87% (544) of the participants have made progress in family peace |
| 8 | Due to SKY Exercises and meditation-293 participants cured of joint pain, 147 participants cured of Migraine and Headache, 63 participants cured of Asthma / Breathing Problem, 63 participants cured of Eye problem with respect to sight, watering eyes, 43 participants cured of Anemia, 21 women participants cured of Menstrual Problem (PCOD). |
| 9 | **100% of the participants are happy with the VSP Programme compared to only 38% before joining the program** |

## Feedback Trend



மணிசெந்தில்குமார் B.Com.,
ஊராட்சி மன்றத் தலைவர்
கஞ்சம்பட்டி ஊராட்சி,
பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம்,
கோயம்புத்தூர் மாவட்டம் – 642 003



செல் : 99426 03272
98659 84008

அன்புடையீர்,

தேதி : 18.9.2024.

வாழ்க வளமுடன் ! எங்கள் கஞ்சம்பட்டி ஊராட்சியில் கடந்த ஐந்து மாதங்களாக வேதாத்ரி மகரிஷி அருளிய மன வளக்கலை யோக பயிற்சிகளை உலக சமுதாய சேவா சங்கம், ஆழியார் அறிவு திருக்கோவில் கிராமிய சேவை திட்டத்தின் கீழ் எங்கள் ஊராட்சி பொதுமக்களுக்கு ஊராட்சியின் நான்கு கிராமங்களிலும் யோகா பயிற்சி மற்றும் தையல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. இந்த வகுப்புகளில் மொத்தமாக சுமார் 700 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பலன் பெற்றனர். 65 நபர்கள் பிரம்ம ஞான பயிற்சி பெற்றோம். இதில் நானும் எனது குடும்பத்தாரும் கலந்து கொண்டு பலன் பெற்றோம்.

இந்த யோகா பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டவர்களுக்கு நாள்பட இருந்து வந்த உடல் உபாதைகள் நீங்கி உடல் ஆரோக்கியத்தில் மேம்பாடு அடைந்துள்ளனர். மேற்கண்ட பயிற்சிகளுக்கு பின் எங்கள் ஊராட்சியில் அனைவரும் மன நலம் குடும்ப நலம் மேம்பட்டு அமைதியான ஆரோக்கியமான வாழ்க்கை கிடைக்க பெற்றுள்ளோம். இதற்காக இப்பயிற்சியினை வழங்கிய வேதாத்ரி மகரிஷி அருளிய மன வளக்கலை யோக பயிற்சிகளை உலக சமுதாய சேவா சங்கம், ஆழியார் அறிவு திருக்கோவில் கிராமிய சேவை திட்டம், அனைத்து ஆசிரியர்கள் , ஒருங்கிணைப்பாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இந்த திட்டங்கள் மூலம் மன வளக்கலை யோகா வகுப்புகள் அனைத்து கிராம மக்களுக்கும் சென்று சேர குரு அருளும் இறையருளும் துணைபுரிய இறைவனை வேண்டுகிறோம்.

S. Manomani
தலைவர்/ செயல் அலுவலர்
கஞ்சம்பட்டி ஊராட்சி
பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம்



முழுமை நல வாழ்விற்கு
மனவளக்கலை யோகா

வாழ்க வையகம்!
வாழ்க வளமுடன்!
வளர்க வேதாத்திரியம்!

S. பாண்டுரங்கன் - கஞ்சம்பட்டி. கிராமிய சேவை திட்டம்...

வேதாத்திரி மகரிஷி அவர்கள் மூலமாக கற்றுக் கொடுத்த தியானப் பயிற்சி துரியாதீத தவம், ஒன்பது மைய தவம், பஞ்ச பூத நவகிரக தவம், நித்தியானந்த தவம், சாந்தி தவம், இந்த அனைத்து தவமும் மிக அற்புதமாக இருந்தது.

யோகாப் பயிற்சி கை பயிற்சி, கால் பயிற்சி, தசை நார் மூச்சுப் பயிற்சி, கண் பயிற்சி, கபாலபதி, மகராசனம், மகராசனம் இரண்டாம் பயிற்சி, உடம்பை தேய்த்து விடுதல் பயிற்சி, அக்குபிரஷர் பயிற்சி, உடம்பைத் தளர்த்தும் பயிற்சி ஆகிய பயிற்சிகள் மிகவும் நன்றாகவும், உடல் ஆரோக்கியமாகவும், மன நிறைவாகவும் உள்ளது.

இதை கற்றுத் தந்த ஆசிரியர்களான அப்பாத்துரை, தனலட்சுமி ஆகியோர் நன்றாக கற்றுத்தந்தனர். இவர்களுடன் வந்த மற்ற ஆசிரியர்களும் நன்றாக கற்றுக்கொடுத்தனர்.

அருட்பெரும் ஜோதி நகர், ஆழியார் மூலமாக பிரம்ப ஞானம் கற்றுக் கொண்டேன். நான் கற்றுக் கொண்ட பாடத்தை அனைவருக்கும் கற்றுக்கொடுப்பேன்.

இப்படிக்கு.

வாழ்க வையகம்!
வாழ்க வையகம்!
வாழ்க வளமுடன்!

S. Pandurangan
அலைபேசி: 8012733681

Name : B. அனிதா
Village : கஞ்சம்பட்டி
Contact No : 88832 63239



நான் கிராமிய சேவை திட்டத்தில் இணைந்து மனவளக்கலை யோகா பயிற்சி மற்றும் தையல் கலைப் பயிற்சியும் பெற்றுக்கொண்டேன். மனவளக்கலை யோகாப் பயிற்சியினால் மன அமைதி மற்றும் உடல் ஆரோக்கியமாக இருப்பதை உணர்கிறேன் நான் பெற்றுக்கொண்ட இந்த பயிற்சியை எனது குடும்பத்தினருக்கும் கற்றுத் தருகிறேன். குழந்தைகளின் செயல்களில் மாற்றம் ஏற்படுவதை உணர்கிறேன்.

தையல் கலைப் பயிற்சி எனக்கு சுயதொழில் செய்ய பெரும் உதவியாக இருக்கும் எனவும் இதனால் சிறு வருமானம் ஈட்ட இயலும் எனவும் நம்பிக்கையுடன் உள்ளேன். இந்தப் பயிற்சியை நமக்குத் தந்தவர் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் அதனை அதே சிறப்புடன் எனக்கு எடுத்துக் கூறியவர் எனது ஆசிரியர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துகளும் தெரிவித்துக்கொள்கிறேன். இச்சிறந்த பணி மென்மேலும் தொடர விரும்புகிறேன்.

வாழ்க வையகம் !
வாழ்க வையகம் !
வாழ்க வளமுடன் !

இப்படிக்கு
B. Anitha

Name: K.S. BALACHANDRAN. B.Sc.(Agri)
Village: KANJAMPATTI.
Contact No: 6380605254
9486354477



வாழ்க வையகம். வாழ்க வையகம்.
வாழ்க வளமுடன்.

நான் எங்களது கிராமத்தில் நடைபெறும் மனவளக்கலை பயிற்சிக்கு கடந்த 4 மாதங்களுக்கு மேலாக காலை 5 மணிக்கு சென்று பயிற்சி பெற்று வருகிறேன். ஆரம்பத்தில் நான் சுகாசனத்தில் அமருவது கடினம் ஆகவே இப்போது வஜ்ராசனத்தில் அமர்ந்து பயிற்சியால் [illegible] அளவு எனது உடல் ஆரோக்கியம் பெற்றுள்ளேன். கண் பயிற்சி செய்வதால் எனது கிட்டப்பார்வை குறைபாடு நிவர்த்தியாகி வருகிறது. மகரிஷி அவர்களின் மனவளக்கலை என்ற மந்திரத்தை உலகம் முழுவதும் கொண்டு செல்லவேண்டும் தனிமனித அமைதி உலக அமைதி என்ற கனவை நனவாக்க, ஆழியாறு அறிவுத்திருக்கோவில் அறங்காவலர்களும், பயிற்சி தரும் ஆசிரியப் பெருமக்களும் எடுக்கும் முயற்சி பாராட்டத்தக்கதாகும். கிராம சேவைத்திட்டம் அனைத்து மக்களுக்கும் மனவளக்கலை பயிற்சி பெற உதவும் உன்னத திட்டமாகும் இந்த திட்டத்தினை தொடர்ந்து அனைத்து கிராமங்களிலும் செயல்பட ஆவன செய்ய வேண்டுகிறேன். பயிற்சி காலம் நிறைவடைந்த போதும் எங்கள் கிராமத்தில் மனவளக்கலை மன்றம் துவக்கி தொடர்ந்து தவம் தியானம். உடற்பயிற்சி நடைபெற என்னால் இயன்ற பணிகளை செய்ய உறுதிபூண்டுள்ளேன் பயிற்சி ஆசிரியர்கள் வாரம் ஒருமுறையாவது எங்கள் கிராமத்திற்கு வருகை தந்து பயிற்சி தர ஆவன செய்ய வேண்டுகிறேன்.

வாழ்க வளமுடன்.

K.S. Balachandran

பெயர் : P. சந்தியா

வயது : 31

ஊர் : கந்தசம்பட்டி

Ph : 6381493741.

Date :



நான் மனவளக்கலை யோக பயிற்சி கந்தசம்பட்டி கிராம சேவா சங்கத்தின் மூலம் அழியார் அறிவு திருக்கோயில் ஸ்ரீ வேதாத்திரி மகரிஷி அவர்களின் ஆசிரியர்கள் மூலம் கடந்த 5 வருட மாதகாலமாக நடத்தப்பட்டது அதில் நான் கலந்து கொண்டு பயிற்சி எடுத்தேன் மிகச் சிறப்பாக ஆசிரியர்கள் மனவளக்கலை, பிரம்மஞானம், தினந்தோறும் அன்றாட வாழ்வில் நாம் செய்ய வேண்டிய எளிய முறை உடற்பயிற்சிகள் எடுத்துரைத்தனர் மிகச் சிறப்பாக வகுப்பு நடத்தப்பட்டது அதில் அது எனக்கு மிகவும் சிறப்பாக இருந்தது. தவப்பயிற்சிகள் நான் மேற்கொண்டேன் அது எனக்கு மனதிற்கு அமைதியாக இருந்தது மேலும் நான் எடை குறைத்து உள்ளேன், ஆரோக்கியமான உணவு பழக்கம், காலையில் சூரிய நமஸ்காரம் ஆகிய பயிற்சிகள் மூலம் தினசரி வேலைகள் எனக்கு மிகவும் எளிமையாக இருந்தது. எனக்கு உடல் நலமாகவும், மனநலமாகவும் இருந்த பிரச்சனைகள் எல்லாம் படிப்படியாக குறைந்து உள்ளது இதை என்னால் உணரவும் முடிந்தது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

என்பதற்கு இணங்க இதை கற்றுக் கொடுத்த மகரிஷி ஆசிரியர்களுக்கும் ஆழியார் அறிவுத் திருக்கோயிலுக்கும் கந்தசம்பட்டி சமுதாய சேவை திட்டத்திற்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்

வாழ்க வையகம்

வாழ்க வையகம்

## 11. எதிர்காலத் திட்டங்கள்:

*ஆரோக்கியமும், அமைதியும் மிக்க **கஞ்சம்பட்டி** கிராமம், **பொள்ளாச்சி மனவளக்கலை** மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.*

## 12. வாழ்த்து:

***கஞ்சம்பட்டி** கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்க்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், **பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன்** அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி வழங்கிய **ஆழியார் அறிவுத்திருக்கோயில்-க்கும்,** இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த **கோவை** மண்டல பொறுப்பாளர்களுக்கும், **பொள்ளாச்சி மனவளக்கலை** மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் **Asst.Prof.V.Appadhurai & Asst.Prof.M.Dhanalakshmi** அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய **VSP நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு** உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.*

***உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை***
***உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.***
***உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே***
***உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.***

***-வேதாத்திரி மகரிஷி***

*தொண்டாற்றி இன்பம் காண்போம்!* *நன்றி, வாழ்க வளமுடன்!*

*குருவின் சேவையில்*
*WCSC-VSP இயக்குனரகம்*
*அறிவுத்திருக்கோயில், ஆழியார்*